தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 7, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 20, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.”

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங்கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 132, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. *ஈஸ்வரப்பன் அவர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

பகுதிநேர நியாய விலைக் கடைகள்

***7069—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, புங்கனூர் ஊராட்சி, எல்லாசிகுடிசை, முவரசேரி நகர் மற்றும் விளாப்பாக்கம் பேரூராட்சி, சின்னதக்கை

[2022 ஏப்ரல் 20

ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், டி. காவனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும், எல்லாசிகுடிசை மற்றும் முவரசேரி நகர்ப் பகுதிகளில் உள்ள 147 குடும்ப அட்டைகளுடன், வெள்ளாகுளம் முழுநேர நியாய விலைக் கடை 481 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றன. குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டவுடன் தாய் நியாய விலைக் கடையில் 334 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் எல்லாசிகுடிசை மற்றும் முவரசேரி நகர் பகுதிகளுக்கும், வெள்ளாகுளம் முழுநேர நியாய விலைக் கடைக்கும் முக்கால் கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. புதிய நியாய விலைக் கடை கோரும் எல்லாசிகுடிசை மற்றும் முவரசேரி பகுதிகளில் முறையே 97 + 50 = 147 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், எல்லாசிகுடிசை மற்றும் முவரசேரி பகுதிகளில் அரசுக் கட்டடங்கள் ஏதும் இல்லை. எனவே, கிராமப்புறப் பகுதிகளில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிகளில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் எல்லாசிகுடிசை மற்றும் முவரசேரி பகுதிகளில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல், இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், திமிரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் சின்னதக்கை பகுதியில் உள்ள 160 குடும்ப அட்டைகளுடன், நாராயணபுரம் பகுதிநேர நியாய விலைக் கடையானது ஏற்கெனவே 385 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது. எனினும் சின்னதக்கை பகுதியில் நகரும் நியாய விலைக் கடை ஒன்று துவங்கப்பட்டு செயல்பட்டு

2022 ஏப்ரல் 20]

வருகின்றது. எனவே, சின்னதக்கை பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன். கனியம்பாடி ஒன்றியம், கனியம்பாடி ஊராட்சி ஒன்றியம், திமிரி ஊராட்சி ஆதி திராவிடர் நல குடியிருப்புப் பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019-ல் வழங்கப்பட்டும், அந்தக் கடைக்கு கடந்த இரண்டு வருடங்களாக அனுமதி வழங்கப்படாமல் இருந்தது. தற்போது கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, மூன்று மாதங்களில் இதற்கான ஆணை வழங்கப்பட்டு, கடை திறக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கேள்வியே கேட்கவில்லை. நன்றிதான் சொன்னேன். முவரசேரி நகர் பகுதியில் 100 இருளர் குடும்பங்கள் வசிக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் வந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஆகவே, இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று துறை ரீதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், நாராயணபுரம் மற்றும் சின்னதக்கை பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகள் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன. இதனால், தாய்மார்கள் தேசிய நெடுஞ்சாலையில் சென்று பொருட்கள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆற்காடு ஒன்றியம், அரும்பாக்கம் ஆதி திராவிடர் பகுதிக்கு தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத்தர

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முவரசேரி, எல்லாசிகுடிசை பகுதிகளில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை கேட்பதோடு, கிட்டத்தட்ட அதன் அருகாமையில் இருக்கக்கூடிய சின்னதக்கைக்கும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். முதலில் எந்தக் கடை திறக்க வேண்டும் என்பதை அவர் தெரிவிக்க வேண்டும்; தெரிவித்தால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதைச் சொன்னாலும் தவறாகப் போய்விடும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைரீதியாக ஆய்வு செய்து, எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், பகுதி நேரக் கடையாக 600 குடும்ப அட்டைகள் கொண்ட கனியம்பாடி ஒன்றியத்தில் உள்ள கத்தாழம்பட்டு கூட்டுறவு நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாகவும், மேலும், பகுதி நேரக் கடையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற 616 குடும்ப அட்டைகள் கொண்ட கீழ்வல்லம் கூட்டுறவு நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாகச் செயல்படுத்தவும், வல்லம் ஊராட்சியில் உள்ள சந்தனக்கொட்டாய்க்கு பகுதி நேரக் கடையை அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மிக முக்கியப்*

2022 ஏப்ரல் 20]

பணியான, மக்களுக்கு குடிமைப் பொருட்களை வழங்குவது அத்தியாவசியமான தேவையாகத்தான் இருக்கிறது. தங்களுக்கு அருகாமையில் கடைகள் வர வேண்டும் என்பதும், பேருந்துகள் அருகாமையில் வர வேண்டும் என்பதும், எல்லா மக்களிடத்திலும் இருக்கக்கூடிய எண்ணம்தான். இப்போது அதிகமான எதிர்பார்ப்பு மக்களிடத்தில் இருக்கின்றது. அவர் சொல்வதைப்போல, சின்னதக்கை என்றாலும், அதில் பகுதிநேரக் கடையில் இருந்து பிரித்து வைக்க வேண்டும். மொத்தமுள்ள 385 குடும்ப அட்டைகளில், 160 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், 225 குடும்ப அட்டைகள்தான் இருக்கும். ஒரு பகுதிநேரக் கடையிலிருந்து இன்னொரு பகுதிநேரக் கடையை பிரிப்பது போன்று இதுவரைக்கும் அப்படிப்பட்ட முடிவுகள், நிகழ்வுகள் நடந்ததில்லை. சின்னதக்கை, எல்லாசிகுடிசை, மூவரசேரி பகுதிகளில் எது அத்தியாவசியம் என்பதைக் குறித்து கலந்தாலோசித்து நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, குறிப்பாக துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, அந்தக் கடைகளைத் திறப்பதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்தில் தென்அழகாபுரம் பகுதியில் நீண்ட நெடுங்காலமாக ரேஷன் கடை இயங்கி வருகிறது. அது முழுக்க முழுக்க பட்டியலின மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பகுதி. அந்த ரேஷன் கடை ஒரு பஜனை மடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்காக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அந்த மக்களுடைய 15 ஆண்டுக்கால கோரிக்கையை ஏற்று, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறேன். ஆனால், என்ன இடர்பாடோ தெரியவில்லை. இடம் இருக்கிறது; அந்த இடத்தை எடுத்து, நான் ஒதுக்கியிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து விரைந்து கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கோரிக்கை, இடமும் இருக்கிறது, அவரே பணமும் கொடுத்திருக்கிறார். அதில் என்ன ஆட்சேபணை இருக்கிறது? கண்டிப்பாக உடனே கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருப்பூர் மாநகராட்சி, அங்கன்வாடி பகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் எண் 2092 செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில்* 'A' Group, 'B' Group *என கிட்டத்தட்ட 13,446 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தச் சங்கத்தில் ஒட்டுமொத்தமாக 22,650 குடும்ப அட்டைகள் உள்ளன. ஆகவே, இச்சங்கத்தை நகர கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தக் கேள்வியே புரியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மைக்* clear-*ஆக இல்லை. சரி செய்தால் நன்றாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. விஜயகுமார் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருப்பூர் மாநகராட்சி, அங்கன்வாடி பகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் எண் 2092 செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில்* 'A' Group, 'B' Group *என கிட்டத்தட்ட 13,446 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தச் சங்கத்தில் ஒட்டுமொத்தமாக 22,650 குடும்ப அட்டைகள் உள்ளன. ஆகவே, இச்சங்கத்தை நகர கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 20]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அது நகரத்தை ஒட்டி இருப்பதால் நகர கூட்டுறவுச் சங்கமாக மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அவர் வைத்திருக்கிறார். அதில் பிரச்சினை ஒன்றும் இல்லை. இதுகுறித்து உறுப்பினர் மனுவாகக் கொடுத்தால், நிச்சயமாக அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.*

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தஞ்சாவூர் தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சாமியப்பா பயிற்சி நிலையம் இருக்கிறது. அந்தப் பயிற்சி நிலையத்திற்கு 11 ஏக்கரில் மிகப் பெரிய இடம் தஞ்சாவூர் நகரத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. அதில், மேல் பயிற்சிக்கும், அதேபோல, தஞ்சாவூரில் அரசு சார்பில் தொழில் பயிற்சி நிலையம்,* I.T.I. *இருந்தாலும்கூட, தலைநகராக விளங்கக்கூடிய தஞ்சையில் சுற்று வட்டாரத்திலுள்ள 7, 8 மாவட்டங்களிலும் உள்ள கிராமப்புரங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் பயன்படக்கூடிய வகையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்படுமா என்பதுதான் மூலக் கேள்வி. (குறுக்கீடு) பகுதிநேர நியாய விலைக் கடை,* Sub Shop *வேண்டுமா என்பது பற்றிக் கேளுங்கள்.*

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்டது என்பதால் கேட்டேன். தஞ்சாவூரில் பல்வேறு நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. 60–க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள்*

கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதுகுறித்து சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். எத்தனை முழு நேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன என்பதைச் சொல்லியிருக்கிறேன். ஏறத்தாழ 6,000-க்கும் மேற்பட்ட கடைகள், கிட்டத்தட்ட 6,300 கடைகள் வரை இருக்கின்றன. அதேபோன்று, பகுதிநேர நியாய விலைக் கடைகளில் கிட்டத்தட்ட 773 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றன. இந்த ஆண்டு கட்டடம் கட்டுவதற்கான பெருமுயற்சியாக இந்தத் துறையின் மூலமாக, ஓராண்டிற்குக் குறைந்தது 500 கடைகளுக்குக் குறையாமல் கட்ட வேண்டுமென்று இந்தத் துறை முடிவு செய்து, அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, அங்கே எத்தனைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன என்பதை ஆய்வு செய்து குறிப்பிட்டால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், இந்தத் துறை மற்றும் அங்கே இருக்கக்கூடிய பல்வேறு துறைகளின் மூலமும், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவும் நிதி பெறப்பட்டு, அந்தக் கடைகளைக் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் ஒன்றியத்தில் 4 குக்கிராமங்களைக் கொண்ட வி. முத்துலிங்காபுரம் ஊராட்சிக்கு அருகில் அர்ச்சனா நதி ஓடுகின்ற காரணத்தினால், அந்த நதியின் தெற்குப் பகுதியிலுள்ள கரையில் இரண்டு குக்கிராமங்களும், வடக்குப் பகுதியிலுள்ள கரையில் 2 குக்கிராமங்களும் இருக்கின்றன. வடக்குப் பகுதியிலுள்ள கரையில் இருக்கக்கூடிய வி. முத்துலிங்காபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடை இயங்கிக் கொண்டிருக்கிறது. மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுகின்ற நேரங்களில் தென் பகுதியிலிருக்கக்கூடிய மக்கள் இங்கு வந்து பொருட்களை வாங்க முடியாத நிலையுள்ளது.

2022 ஏப்ரல் 20]

தென் பகுதியில் 170 குடும்ப அட்டைகள் கொண்ட சோரம்பட்டி கிராமமும், 50 குடும்ப அட்டைகள் கொண்ட பெத்துசெட்டிவேடு என்ற கிராமமும் இருக்கின்றது. அந்த 220 குடும்ப அட்டைகளுக்கும் சேர்த்து, சோரம்பட்டி கிராமத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டது நியாயமான கோரிக்கைதான். அங்கு 220 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதேபோல, வட பகுதியிலிருந்து தென் பகுதிக்கு மழைக் காலங்களில் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கும் போக முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தையும் சொல்லியிருக்கின்றார். மேலும், அந்தப் பகுதியில் போதுமான குடும்ப அட்டைகள் இருப்பதால், அந்த இடத்தில் பகுதிநேர நியாய விலைக் கடைக்கான அனுமதியை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதியில், வல்லம் ஒன்றியம், மேல்சித்தாமூரில் இருக்கின்ற நியாய விலைக் கடையைப் பிரித்து துணைக் கிராமமான கல்லேரியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரிப்பது பற்றி அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் எனக்கு இப்பொழுது கடிதமாக தந்துகொண்டேயிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், எது, எது சாத்தியம் என்பதை*

அரசு அலுவலர்களோடு ஆய்வு செய்து, அவற்றில் திரும்பவும் விளக்கங்கள் கேட்கப்பட்டு, உரிய வகையில் எளிமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

கோளரங்கம்

***12317**—**திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் கோளரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி அமைந்திருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்) தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மேற்கண்ட அறிவியல் மையத்திற்குச் சென்று பயனடைந்து வருகின்றனர். எனவே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதியில் அறிவியல் கோளரங்கம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டு, தகவல் தொழில்நுட்ப நூற்றாண்டாக வளர்ச்சியடைந்துள்ளது. கோளரங்கம் என்பது*